# தேவனுடைய உண்மையான மிகச்சிறந்த சித்தம்

## 3.7 அதிகாரங்களுக்குக் கீழ்ப்படிதல்




**வேத வசனம்:** **உங்களை நடத்துகிறவர்கள், உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம் பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்களானபடியால், அவர்கள் துக்கத்தோடே அல்ல, சந்தோஷத்தோடே அதைச் செய்யும்படி, அவர்களுக்குக் கீழ்ப்படிந்து அடங்குங்கள்.**

*எபி. 13:17*

**அறிக்கை:** **தேவன் நமக்கு மேல் அதிகாரிகளை ஏற்படுத்தியது, நாம் அவர்களுக்குப் பணியவேண்டும்**




**சத்தியம்:** தேவன் ஏற்படுத்திய அதிகாரிகளுக்குக் கீழ்ப்படிதல் கர்த்தராகிய இயேசுவுக்குக் கீழ்ப்படிவதற்குச் சமம். நாம் அவர்களை எதிர்க்கும் போது ஆண்டவராகிய தேவனை எதிர்க்கிறோம்.

### வேதப் பகுதி: கொலோசெயர் 3:17-24

**பாடம்**

**1. அடிபணிவதின் ஐந்து "கண்டிப்பாக நான்":** விரைவாக, மகிழ்சியாக, முழுமையாக, மனத்தாங்கல் இல்லாமல், கூடுதல் தொலைவு நட. 5 சாவிகளை உடைய பூட்டப்பட்ட ஒரு கதவை நினைத்துக்கொள். அதுபோல கீழ்ப்படிதலுக்கு 5 பகுதிகள் உண்டு. 1.வேகமாகச் செய். 2.மகிழ்சியாகச் செய். 3.நிறைவேற்றி முடி. 4.அமைதியாக செய். 5.தேவைப்படு மானால் கூடுதலாகச் செய். உன் தலைவருக்கு மகிழ்ச்சியுடனும் வேகமாகவும் உன்னை ஒப்புக்கொடு. கொடுக்கப்பட்ட பணியை முறுமுறுப்பின்றிக் கூடுதலாகச் செய்து முடி.

**2. கீழ்ப்படிதல் தேவனின் கட்டளை:** கீழ்ப்படிதல் என்பது தேவன் கொடுத்தச் சட்டம். பழைய ஏற்பாட்டில் தேவன் நிலத்தைப் பிளக்கச்செய்து கோராகையும் அவன் கூட்டத்தையும் விழுங்கச்செய்தார். காரணம் அவர்கள் தேவனுடைய தலைவர்களை அவமானப்படுத்தி னார்கள். மேற்பார்வையாளர் இல்லாத ஒரு வேலை ஸ்தலத்தை நினைத்துக்கொள். அது ஒழுங்காகவும் வெற்றிகரமாகவும் இயங்குமா? யோவான் 14:31, இயேசு கிறிஸ்துவே நம் உதாரணம் என்று தெளிவாகக் கூறுகிறது. பிதாவானவர் சொல்லியவைகளை எல்லாம் இயேசு கிறிஸ்து செய்தார். நியமிக்கப்பட்ட அனைத்து அதிகாரிகளுக்கும் தேசத்து அரசனுக்கும் அடிபணிய வேண்டும் என்று வேதாகமம் குறிப்பிடுகிறது. சிறுபிள்ளைகளும் பெரியவர்களுக்கும் பெற்றோருக்கும் கீழ்ப்படியவேண்டும். அது தேவனை மகிழ்ச்சியாக்கும். (1 பேதுரு 2:13, 5:5, கொலோ.3:20)

**3. தேவன் அதிகாரிகளை நியமிக்கவும் உபயோகிக்கவும் செய்கிறார்:** தேவனே தலைவர்களுக்குக் கட்டளை கொடுக்கிறார். தேவன் தலைவர்கள் வழியாக மக்களிடம் பேசவும் அவர்களை வழிநடத்தவும் செய்தார் என்று வேதப்புத்தகம் குறிப்பிடுகிறது. பழைய ஏற்பாட்டில் தேவன் தாவீதை இஸ்ரவேலின் மேல் தலைவனாக அபிஷேகம் செய்தார். இன்று தேவன் போதகர்களையும் பிற பொறுப்பாளர்களையும் திருச்சபையின் தலைவர்களாக நியமிக்கிறார். பெற்றோரும் ஆசிரியரும் சிறியவர்களை வழிநடத்தவேண்டும். வேதம் சொல்லுகிறது, மனைவிகள் தங்கள் கணவர்களுக்குக் கீழ்ப்படியவேண்டும். கணவர்கள் மனைவிகளை நேசிக்கவேண்டும். தேவனுடைய சீஷர்களுக்குக் கீழ்ப்படிகிறவர்கள் தேவனுக்கே கீழ்ப்படிகிறார்கள். (எசேக்கியேல் 34:23-24, லூக்கா 10:16)

**4. மனிதன் இயற்கையில் அடிப்பணிகிறவன்அல்ல:** இயல்பாகவே மனிதர்கள் பிறருக்கு கீழ்ப்படிவது இல்லை. பொதுவான பதில் என்னவென்றால், "அவருக்குத் தெரியவில்லை", "இது நல்ல செயல் முறை இல்லை", "இதை நான் செய்ய விரும்பவில்லை". (கடைசியாக உன் பெற்றோர் சொல்லியவைகளையும் அவர்களுக்கு நீ தந்த மாறுத்தரத்தையும் எண்ணிக்கொள்). நாம் நமக்கு மேலிருப்பவர்களுக்கு மரியாதை கொடுக்கவும் கீழ்ப்படியவும் வேண்டும். அவ்விதம் செய்தால் நாமும் ஒருநாள் தேவனால் பொறுப்பாளர்களாக நியமிக்கப்படுவோம். (ஏசாயா 53:6)

**முடிவுரை:** தீயணைக்கும் வீரனின் அடையாளம் வீரம். அதுபோல இயேசு கிறிஸ்துவின் அடையாளம் கீழ்ப்படிதல். தேவன் தம்முடைய மக்களை வழிநடத்தும்படி தலைவர்களை ஏற்படுத்துகிறார். ஆகையால் நாம் தலைவர்களுக்குக் கீழ்ப்படியும் மக்களாய் வாழுவோம்.

**ஜெபம் / அழைப்பு:** இன்றைய சத்தியம் நமது இருதயங்களில் எழுதப்படும்படி இயேசுவின் நாமத்தினால் ஜெபியுங்கள்.